**செய்தி வெளியீடு எண்: 627** **நாள்: 18.10.2012**

## செய்தி வெளியீடு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் இன்று (18.10.2012) தலைமைச் செயலகத்தில், இராமநாதபுரம் மாவட்டம், பசும்பொன் கிராமத்தில் முத்துராமலிங்கத் தேவர் நினைவிடம் அருகில் சுற்றுலாத் துறையின் சார்பில் 28 லட்சத்து 28 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள தியான மண்டபத்தை காணொலிக் காட்சி (Video Conferencing) மூலமாக திறந்து வைத்தார்கள்.

சுற்றுலா மேம்பாட்டில் தமிழ்நாட்டை முன்னணி மாநிலமாக உயர்த்தவும், சர்வதேச அளவில் சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கும் தலைசிறந்த மாநிலமாக தமிழ்நாட்டை உருவாக்கிடவும், வளமான பண்பாடு பாரம்பரியம் மற்றும் கட்டட கலைநயம் மிகுந்த நினைவுச் சின்னங்களைப் பாதுகாக்கவும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் தலைமையிலான அரசு பல்வேறு தொலைநோக்குத் திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது.

அவ்வகையில், இராமநாதபுரம் மாவட்டம், கமுதி வட்டம், பசும்பொன் கிராமத்தில் முத்துராமலிங்கத் தேவர் நினைவிடம் அருகில் 2080 சதுர அடி பரப்பளவில், 150 பேர் அமர்ந்து தியானம் செய்யும் வகையில், 28 லட்சத்து 28 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள தியான மண்டபத்தை, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் இன்று காணொலிக் காட்சி மூலமாகத் திறந்து வைத்தார்கள்.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு நிதி அமைச்சர், மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர், மாண்புமிகு நகராட்சி நிர்வாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர், மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர், மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர், மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர், மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர், மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர், மாண்புமிகு கதர் மற்றும் கிராமத் தொழில் துறை அமைச்சர், மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர், தலைமைச் செயலாளர், சுற்றுலா மற்றும் பண்பாட்டுத் துறைச் செயலாளர் (பொறுப்பு) மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

* * * * * *

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9.
நாள்: 18.10.2012